## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.65/2018

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமி | மதம் | : இந்து |
| த/பெ | : சரவணன் | ஜாதி | : -- |
| வயது | : 57 | கிராமம் | : சத்தரஞ்செயபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**10.04.2026**

**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் ஆமாம். தபால் மூலம் வந்தது. தபாலில் என்ன விவரம் வந்தது என்றால் ஒரு மாதம் மேலானதால் எனக்கு ஞாபகமில்லை. வாதி மணி எனக்கு என்ன உறவு என்றால் தாய் மாமா ஆவார். வழக்கு A அட்டவணை சொத்து, B அட்டவணை சொத்தின் விவரம் தெரியுமா என்றால் ஒன்று தனம்மாள் சொத்து, மற்றொன்று தேசம்மாள் சொத்து ஆகும். B அட்டவணை சொத்தின் ஒரு பகுதிதான் A அட்டவணை என்பது எனக்கு தெரியுமா என்றால் படிப்பறிவு இல்லை. எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வந்தாரா என்றால் இல்லை. B அட்டவணை சொத்தில் பஞ்சாயத்து மூலமாக சிமெண்ட் சாலை அமைத்துள்ளார்கள் என்றால் அங்கு சாலையே இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் B அட்டவணை சொத்தில் பஞ்சாயத்து மூலமாக சிமெண்ட் சாலை அமைத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

2. பி அட்டவணை சொத்து அரசுக்கு சொந்தமான இடம் என்றாலும் B அட்டவணை சொத்தில் பஞ்சாயத்து மூலமாக சிமெண்ட் சாலை

அமைத்துள்ளார்கள் என்றாலும் இல்லை. தனம்மாளுக்கு வாரிசு இல்லை என்றால் அவருக்கு 3 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். 1. கௌரி, 2. லலிதா மற்றும் நான் உள்ளோம். நான்தான் கடைசி மகள் ஆவேன். அரசு தரப்பில் தனம்மாளுக்கு வாரிசே இல்லை என்று சொல்லியுள்ளார்கள் என்றால் நாங்கள் 3 பேர் உள்ளோம். அரசு தவறாக சொல்லியுள்ளது. நான் வழக்கிற்கு முன்பு நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் நாங்கள் வட்டாட்சியருக்கு அறிவிப்பு அனுப்பினோம். தனம்மாளுக்கு வாரிசே இல்லாத நிலையில் நாங்கள்தான் வாரிசு என பொய்யாக ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் நாங்கள் பொய் சொல்லவில்லை. நாங்கள்தான் வாரிசுகள்.

3. நாங்கள் உரிமையில்லாத சொத்தை பொய்யாக எழுதி கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையிருந்திருந்தால் வாதி உரிமை விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பார் என்றாலும் இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வாதிக்கு வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்தின் அடிப்படையில் எந்த உரிமைமாற்றமும் ஏற்படாத நிலையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 9, 10 பிரதிவாதிகள் தரப்பில் – இல்லை)

(குறுக்கு விசாரணை 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)